செய்தி வெளியீடு: 1052 29/11/2008

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு, இன்று எழுதியுள்ள கடிதத்தில் – இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 25/11/2008 தேதியிட்டு முதலமைச்சர் எழுதிய கடிதம் கிடைத்ததாகவும் – 4/12/2008 அன்று காலை 10.15 மணி அளவில் தமிழக முதலமைச்சர் தலைமையில் வருகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் குழுவினை அவரது அலுவலகத்தில் சந்திப்ப தாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இது தவிர, தமிழக அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினை பற்றி 2.12.2008 அன்று பிரதமரைச் சந்தித்து கோரிக்கை வைப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அதற்கான நேரம் காலையா மாலையா என்பது பிரதமரின் அலுவலகத்திலிருந்து தெரிந்தவுடன் அறிவிக்கப்படும்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.